# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 14,594 — 1965 දෙසැම්බර් 24 වැනි සිකුරාද — 1965.12.24

14,594 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 24 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது]

## விலைக்கட்டளைகள்

விலைக்கட்டளை இலக்கம் என். ஈ. 99 | பாவித்த கம்பளி உடுப்புக்கள்

### விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

#### கட்டளை

173 ம் அத்தியாயமாகிய விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம் 3 (2) ம் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் (நானாவித பொருள்கள்) பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரியாகிய இளே குட்டி ஒலிவர் கென்னத் காமினி பெர்னாண்டோ ஆகிய நான் பின்வருமாறு கட்டளையிடுகிறேன் :—

1. இக்கட்டளை பாவித்த கம்பளி உடுப்புக்கள் விலைக்கட்டுப்பாட்டுக் கட்டளை என எடுத்துக் காட்டப்படலாம்.

2. இக்கட்டளை நுவரெலியா மாவட்டத்துக்கு மாத்திரம் ஏற்புடையதாகும்.

3. இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம் பந்தியில் கொடுக்கப்பட்டுள்ள விலைகள் அவ்வட்டவணையின் 1 ம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விபரத்தினைக் கொண்ட பாவித்த கம்பளி உடுப்புக்கள் பாவிப்பாளருக்கு விற்கும் ஆகக்கூடிய விலையும் ஆதல் வேண்டும்.

4. (1) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளில் எத்தொகையையாவது திருப்பி விற்பதற்காக விற்றல் அல்லது குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை அரை டசினுக்கு மேற்பட்ட தொகையில் ஒரே தடவையில் விற்றல் ஓர் மொத்த விற்பனையாகக் கருதப்படுமென்றும்.

(2) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தில் விபரிக்கப்பட்ட ஒரு பொருளை அரை டசினுக்குக் குறைந்த தொகையில் பாவனைக்காக விற்றல் சில்லறை விற்பனையாகவே கருதப்படும்.

(3) குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட பாவித்த கம்பளி உடுப்புக்களை எத்தொகையிலாவது திருப்பி விற்பதற்கு அல்லது பாவிப்பதற்கு மொத்தமாக விற்கப்படாது.

5. இக்கட்டளையால் குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட கம்பளி உடுப்புக்களை தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது எவ்வாகனத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும் அவ்விடத்தில் அல்லது அவ்வாகனத்தில் தகுந்த ஒரு கொள்கலத்தில் பாவித்த கம்பளி உடுப்புக்களின் சிறு தொகையையும் இக்கட்டளையால் அப்பொருளுக்கு விதிக்கப்பட்ட ஆகக்கூடிய விலையையும் ஒரு அங்குல உயரத்துக்குக் குறையாத எண்களில் விலை அட்டைகளில் அல்லது பலகைகளில் எழுதி அப்பொருளையும் ஆகக்கூடிய விலையையும் வாங்குபவரால் நன்றாகப் பார்க்கக்கூடியவாறு அக்கொள்கலத்தில் இணைத்துப் பகிரங்கப் பார்வைக்கு வைத்தல் வேண்டுமென ஆக்ஞையிடுகிறேன்.

6. பாவித்த கம்பளி உடுப்புக்களை விற்பவர் அப்பொருளை வாங்குபவருக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச்சீட்டொன்று கொடுத்தல் வேண்டும் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;

(ஆ) விற்ற கம்பளி உடுப்புக்களின் விபரமும் தொகையும்,

(இ) விற்ற தொகைக்குக் கொடுக்கப்பட்ட விலை.

7. குறித்த அட்டவணையின் 1 ம் பந்தியில் விபரிக்கப்பட்ட கம்பளி உடுப்புக்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் 1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ம் திகதி நடுப்பகல் 12 மணிக்குள் கீழ்க் குறிப்பிட்டுள்ள விபரங்களடங்கிய அறிக்கை ஒன்று எனக்குச் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) அறிக்கை சமர்ப்பிக்கும் பொழுது கையிருப்பில் வைக்கப்பட்டிருக்கும் கம்பளி உடுப்புக்கள்.

(ஆ) அத்தகைய கையிருப்புக்கள் வைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பண்டகசாலையையும் வேறிடத்தையும்.

8. இந்த அட்டவணையின் 2 ம் பந்தியில் குறிக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய விலைகள் விற்கப்படும் கம்பளி உடுப்புக்களைச் சுற்றி கொடுக்கும் உறை அல்லது வைத்துக் கொடுக்கும் கொள்கலம் ஏதாவது உபயோகிக்கப்படின் அதன் விலையும் உள்ளடங்கும்.

9. இக்கட்டளை உடஹேவாஹெட்டப் பிரிவுக் காரியாதிகாரியின் பகுதிக்குச் செல்லுபடியாகாது.

10. இதனோடிருக்கும் அட்டவணையின் 1 ம் பந்தியில் குறிக்கப்பட்ட பொருட்களையே பாவித்த கம்பளி உடுப்புக்கள் என்பது குறிக்கும்.

ஐ. ஓ. கே. ஜீ. பெர்னாண்டோ,
பிரதி விலைக்கட்டுப்பாட்டதிகாரி,
நுவரெலிய மாவட்டம்.

1965 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21 ம் திகதி பி. ப. 4.00 மணிக்கு நுவரெலியாக் கச்சேரியில் வைத்துக் கையொப்பமிடப்பட்டது.

அட்டவணை

| 1 ம் பந்தி<br>பாவித்த கம்பளி உடுப்புக்கள் | 2 ம் பந்தி<br>ஒரு பொருளின் ஆகக்கூடிய சில்லறை விலை<br>ரூ. ச. |
|---|---|
| பாவித்த கோட் ஆண்களுடையது .. .. | 12 00 |
| பாவித்த கோட் பெண்களுடையது .. .. | 10 00 |
| பாவித்த நீளக் கால்சட்டை ஆண்களுடையது .. | 8 00 |
| பாவித்த மேலங்கி (ஓவர்கோட்) ஆண்களுடையதும் பெண்களுடையதும் .. .. | 15 00 |
| பாவித்த மேலங்கி (ஓவர்கோட்) சிறுவர் சிறுமியருடையது .. .. | 5 00 |
| பாவித்த ஸ்வெட்டர் நீளக்கையுடையது. ஆண்களுடையதும் பெண்களுடையதும் .. | 6 00 |
| பாவித்த ஸ்வெட்டர் அரைக்கை. ஆண்களுடையதும் பெண்களுடையதும் .. .. | 5 00 |
| பாவித்த ஸ்வெட்டர் நீளக்கையுடையது. சிறுவர் சிறுமியருடையது .. .. | 3 00 |
| பாவித்த ஸ்வெட்டர் அரைக்கையுடையது. சிறுவர் சிறுமியருடையது .. .. | 2 00 |
| பாவித்த கம்பளிப் போர்வைகள். பெரிய சைஸ் நீளம் 80″ அகலம் 60″ (மேற் சொன்ன அளவும் அதற்கு மேற்பட்டவையும்) .. | 20 00 |
| பாவித்த கம்பளிப் போர்வைகள். சிறிய சைஸ் நீளம் 80″ அகலம் 60″ க்குக் குறைந்த அளவுள்ளவை .. .. | 10 00 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல; இவை **ஆகக்கூடிய** விலைகளாகும்.

12–1362.

இலங்கை, வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனால் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.